Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 479 / 2019

DEPOSITION OF WITNESS : P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரையா | Father's Name/ Husband Name | : குருசாமி |
| Village | மேக்கிழார்பட்டி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.04.2023

(1 வது எதிரி ஆஜர். 2,3,4 ஆஜர் இல்லை. குவிமுச 317 ன்படியான மனு அனுமதிக்கப்பட்டது )

<u>முதல் விசாரணை</u>

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். அசா1 எனது மகள் ஆவார். ஆஜர் 1 எதிரியை எனக்கு தெரியும் . மற்ற மூன்று எதிரிகளையும் தெரியும். எனது மகளுக்கும் அனுப்பபட்டியை சேர்ந்த 1 வது எதிரிக்கும் கடந்த 2017 ம் வருடம் ஆண்டிபட்டியில் உள்ள மீனாட்சியம்மன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. எனது மகளுக்கு திருமணத்தின்போது 10 பவுன் நகையும் ரூ. 50 மதிப்புள்ள பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தோம். மேலும் 1 ம் எதிரிக்கு அரை பவுன் மோதிரம் கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகுஎனது மகளும் 1 ம் எதிரியும் எதிரியின் ஊரில் குடியிருந்தார்கள். 4 மாதம் பிரச்சினை எதுவும் இல்லை . அதன்புன்பு என் மகள் வளைகாப்பு 7 மாதத்தில் நடத்தி எனது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். எனது பேரனை பாரக்க எதிரி வரவில்லை. எனது மகளுக்கு சீக்கு உள்ளது என்று சொல்லி ரூ.5 லட்சம் வேண்டும் என எதிரிகள் கேட்டார்கள். நாங்கள் தேனியில் உள்ள காயத்ரி ஆஸ்பத்திரியில் சென்று சோதனை செய்தபோது என்

மகளுக்கு எந்த பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டார்கள் . அப்போது எதிரிகளின் வீட்டில் இருந்தும் ஆள் வந்திருந்தார்கள் . 2019 ம் வருடம் என் மகள் எனது மருமகன் வீட்டிற்கு சென்றார் . அப்போது எனது மகளின் மாமியார் , 2 நாத்தனார்கள் இழுத்துப்போட்டு எனது மகளை அடித்ததால் நாங்கள் சென்று எனது மகளை என் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம் . எனது ஊர் பெரியவர்கள் ஊர்நாட்டாமை ராமர் , ராசா , எதிரிகள் தரப்பில் அவர் ஊர் நாட்டாமை சுருளி , செல்லையா ஆகியோர்களை வைத்து எதிரியின் ஊரில் பேசியபோது சேர்ந்து வாழ முடியாது என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு என் மகள் எதிரிகள் மீது ஆண்டிபட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.04.24 15:50:45 +0530